**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.63/2012**
**Connected with**
**அசல் வழக்கு எண்.208/2011**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22–ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 22.03.2024 | தந்தை பெயர்: | முனியாண்டி |
| பெயர்: | பாலசுந்தர்<br>(DW-1 Chief ) | வயது : | 56/2024 |
| கிராமம்: | குளத்துார் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 22.03.2024.**

நான் இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

09.06.2010-ம் தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனக்கு 2-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 16.08.2010 மற்றும் 22.03.2011 ஆகிய தேதியிட்ட தாவா சொத்திற்கு நான் செலுத்திய கிஸ்தி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.** (எண்ணிக்கை–2) 27.03.2020–ம் தேதியிட்ட 2–ம் பிரதிவாதியின் தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த கடன் அக்ரிமெண்டின் அசலை தாக்கல் செய்கிறேன்

**அது பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (ஆவணமானது பதிவு செய்யப்படவில்லை என வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையானது தீர்ப்பின்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்) 14.12.2010–ம் தேதியிட்ட வாதிகள் எனக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20.12.2010–ம் தேதியிட்ட பதில் சட்ட அறிவிப்பு அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.